இதனைப்பற்றி என்ன? ....

# லூத்தரன் ஆராதனை

## எமது கர்த்தர் ஏன் ஆராதனைக்கு எம்மைக் கூட்டிச்சேர்க்கிறார்?

எமது கர்த்தர் எமக்கு வழங்கும் மிகவும் பெறுமதிவாய்ந்த கொடைகளும் திரவியங்களும் அவரது மன்னிப்பும், ஜீவனும் இரட்சிப்புமாகும். கபடற்ற அவரது வாழ்வினூடாகவும் கசப்பான பாடுகள் மற்றும் மரணத்தினூடாகவும் கிறிஸ்து எம்மைப் பாவத்திலும் மரணத்திலும் பிசாசிலுமிருந்து எம்மைக் கிரயத்துக்குக்கொண்டு வெற்றிசிறந்தார். இயேசுக்கிறிஸ்துவினூடாக, உலகின் பாவங்கள் அனைத்துக்கும் கிரயம் செலுத்தப்பட்டு தேவனுடைய உக்கிரகோபம் தணிக்கப்பட்டது. கிறிஸ்து முழு உலகினையுமே தேவனுடன் ஒப்புரவாக்கினார்.

இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரகடனப்படுத்தப்பட்டு, அவரது ஜனங்கள் ஞானஸ்நானம்பெற்று, அவரது வார்த்தை வாசிக்கப்படும்போது அவர் மீளவும் மீளவுமாக எம்மைச் சேவிக்கிறார். அவரது மன்னிப்பு அறிவிக்கப்பட்டு, மனம் வருந்தியவர்கள் விடுவிக்கப்படும்போது அவர் எம்மைச் சேவிக்கிறார். அப்பம் மற்றும் ரசத்தின்கீழ் அருந்திப் பானம் பண்ணுவதற்குத் தனது சரீரத்தையும் இரத்தத்தையும் வழங்கும்போது அவர் எம்மைச் சேவிக்கிறார். இப்படியாகத்தான் எமது ஆண்டவர் எமக்கு மன்னிப்பையும், வாழ்வையும் இரட்சிப்பையும் வழங்குகிறார். எமது நல்லவரும் கிருபைநிறைந்தவருமான தேவனால் அழைக்கப்பட்டு ஆராதனைக்கு ஒன்றுதிரட்டப்படுவது என்னே ஆசீர்வாதம்!

## லூத்தரன் ஆராதனையிலே இதயமும் மையமும் எது?

தனது வார்த்தையினூடாகவும், திருவருட்சாதனங் களூடாகவும் எமக்காகவும் எம்முடனும் பிரசனமாகியிருக்கும் இயேசுக்கிறிஸ்துமீது வெளிப்படையாக லூத்தரன் ஆராதனையாது நோக்கக்குவியத்தை வைத்துள்ளது. எனவே லூத்தரன் ஆராதனையானது கிறிஸ்து–மையமானதே ஒழிய மனிதன்–மையமானதல்ல. ஆராதனைக்காகக் கூடிவந்திருக்கும்போது நாம் ஒரு தொலைதூரத்துக் கிறிஸ்துவிலே சிந்தனைகொள்வதில்லை, அல்லது இரத்தினச்சுருக்கக் கொள்கைகளிலே தியானிப்பதில்லை அல்லது வாழ்வுக்கான பல்வேறு கொள்கைகளிலே மனதைப் பறிகொடுப்பதுமில்லை. சபையிலே நாம் இருப்பது உல்லாசமாயிருக்கவும் மகிழ்வூட்டப்படவும் அல்ல. கிறிஸ்து அவரது வார்த்தையிலும் திருவருட்சாதனங்களிலும் அவர் வாக்களித்த பிரகாரமாகவே எம் மத்தியிலே ஜீவித்து சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். இயேசு கூறினார், "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன்" (மத். 28:20). எம்மை அவர் அவரது வார்த்தையையும் திருவருட்சாதனங்களையும் சூழ்ந்து அணிதிரட்டும்போது, இந்த வாக்குத்தத்தை அவர் மீளவும் இந்த வாக்குத்தத்தை நிறைவேற்றுகிறார்.

## லூத்தரன் ஆராதனையிலே அடிப்படையான கோலம் அல்லது "தாளம்" என்ன?

எமது லூத்தரன் ஆராதனையைப் பாட்டுப்புத்தகம் இப்படியாகத்தின் விபரிக்கிறது:

> எமது கர்த்தர் பேசுகிறார் நாம் செவிமடுக்கிறோம். அவரது வார்த்தை அவர் கூறுவதை எமக்குச் சேர்ப்பிக்கிறது. கேள்விப்படுகிறவைகளிலிருந்து பிறந்த விசுவாசம் பெறப்பட்ட கொடைகளை ஊக்கமான நன்றியறிதலுடனும் துதியுடனும் அங்கீகரிக்கிறது. ... அவர் எமக்குக் கூறியவைகளை அவருக்கு மீண்டும் சொல்லும் நாம், மிகவும் நிஜமானதும் நிச்சயமானதுமானதை மீளவும் உரைக்கிறோம். ... எமது ஆராதனையின் தாளம் அவரிடமிருந்து எமக்கு வருகிறது, பின்பு எம்மிடமிடருந்து திரும்ப அவருக்குச் செல்கிறது. அவர் எமக்குக் கொடைகளை வழங்குகிறார், நாம் ஒன்றாக அவைகளைப் பெற்று அவைகளைப் புகழ்கிறோம். ஒருவர் ஒருவருடன் சங்கிதங்களாலும் பாடல்களாலும் ஞானப்பாடல்களாலும் பேசி ஒருவரை ஒருவர் கட்டி எழுப்புகிறோம்.

## "தெய்வீக ஆராதனை" என்பதன் அர்த்தம் என்ன?

சரித்திர ரீதியாக இந்தப் பதம் லூதரன் ஆராதனையானது தெய்வீக ஆராதனை என விபரிக்கவே பயன்படுத்தப்பட்டது. இது ஆராதனையின் தாளத்தைப் புரிந்துகொள்ள எமக்கு உதவுகிறதா யிருக்கிறது – அதாவது முதற்கண் தேவன் தனது கொடைகளூடாக எம்மைச் சேவிக்கிறார், பின்பு அவர் செய்த அனைத்துக்குமாக நாம் சர்வவல்ல தேவனுக்கு நன்றிகூறுவதிலும் துதிப்பதிலும் எமது சேவை இடம்பெறும். தனது கொடைகளைத் தேவன் நமக்கு வழங்குதலும் நாம் அவருக்கு நன்றிகளைக் கூறுவதும் பொருத்தமானதாகவே தெய்வீக ஆராதனை எனும் பதத்தினாலே தெரிவிக்கப்படுகிறது.

தெய்வீக ஆராதனையானது ஒரு "பரிசுத்த" நேரம், அதாவது "பிரித்துவைத்த" ஒரு நேரம் என அர்த்தம்பெறும். உலகில் வேலைத்தினங்களினின்று வேறுபடுத்தப்பட்ட ஒரு நேரம் அது – எமது கர்த்தருடன் நேரம் செலவிடும் ஒரு நேரம். உண்மையிலேயே, தெய்வீக ஆராதனையிலே நாம் பரிசுத்த, சர்வவல்லமையுள்ள, என்றென்றும் ஜீவிக்கிற தேவனின் பிரசன்னத்திலே ஒன்று சேர்க்கப்படுகிறோம் என்பதால், எமத கர்த்தர் எமது பாவங்களை மன்னித்து, இன்று எமக்கு நித்திய வாழ்வையும் அவருடன் என்றென்றுமான நித்திய இரட்சிப்பையும் வழங்கும்போது, நாம் "பூலோகத்திலே பரலோகம்" எனும் நேரத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம். தெய்வீக ஆராதனை பற்றிய இப்படியான புரிந்தறிவானது லூத்தரன் ஆராதனையை முதற்தரம் அனுபவிப் பவர்கள் அதனை கனம்பொருந்தியதாயும், மரியாதைக்குரியதாயும் பரிசுத்தமானதாயும் விபரிப்பது ஏன் என்பதை விளக்குகிறது.

## லூத்தரன் ஆராதனையானது ஏன் ஒரபோலத் தோன்றுவதும் ஒலிப்பதுமுண்டு?

லூத்தரன்கள் மேற்குச் சபையின் சரித்திரம் முழுவதுமாக பொதுவான ஆராதனை ஒழுங்குகளைப் பயன்படுத்தி வந்தனர். தெய்வீக ஆராதனையின் இரண்டு பிரதான பகுதிகளாவன, (1) தேவனுடைய வார்த்தையின் பிரகடனமும், (2) கர்த்தரின் பந்தியைக் கொண்டாடுவதும். லூத்தரன் சபையிலே பாவிக்கப்படும் இதர ஆராதனை ஒழுங்குகள் வார்த்தையின் அதிகம் விஸ்தரிக்கப்பட்ட ஆராதனையாக உள்ளது. அவைகள் காலைவழிபாடு மற்றும் மாலை வழிபாடுகள், காலை மாலை ஜெபங்கள், துயில்கொள்ளமுன்பதான ஜெபம் மற்றும் வழிபாட்டொழுங்கு ஆகியவைகளாகும்.

லூத்தரன் ஆராதனைகளிலே, போதகர்களும் அவையினர்களும் ஆராதனை ஒழுங்குகளை மாறிமாறி பாடுவார்கள் அல்லது பேசுவார்கள். பாடல்களை அவையினர்கள் பாடுவதென்பது லூத்தரன் ஆராதனைகளிலே எப்போதுமே தனித்தன்மையான விடயமாகும். அவையினர் பாடல் படிப்பதை வலியுறுத்தி, பாடகர் குழுவை வலிவூட்டும்படியாக, பண்டைய மற்றும் நவீன இசைப் பாரம்பரியங்களுள் அதிசிறந்தவைகள் லூத்தரன் சபையால் அதன் ஆராதனைகளிலே தழுவப்பெற்றிருக்கும்.

எமது போதகர்கள் மேலங்கி என அழைக்கப்படும் ஒரு விசேஷ ஆடையை அணிவார்கள். இந்த ஆடைகள் மனிதனின் தனிநபர்த்துவங்களை மூடிநின்று, அவனுக்கு மேற்கொள்ளும்படியாக வழங்கப்பட்ட பணிநிலையின் பரிசுத்த கடமைகளை வலியுறுத்துவதாக இருக்கும். சபைவருடத்தின் காலத்தின் முழுவதும், நியமிக்கப்பட்ட வாசிப்புக்கள் மற்றும் ஜெபங்களின் ஒழுங்கு அவையினரை கிறிஸ்துவின் வாழ்வின் பிரதான நிகழ்வுகளிலும் அந்த நிகழ்வுகள் இன்று எம்மிலே என்ன தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதிலும் நோக்கக்குவியம் செய்வதற்கு உதவுகிறது. பிரசங்கம்

பொதுவாக நியமிக்கப்பட்ட பாடங்களிலேயே தங்கியதாக இருப்பதும், தேவனுடைய நியாயப்பிரமாணம் மற்றும் சுவிசேஷத்தின் தெளிவான தொடர்பாடலாக இனங்காணப்படுவதும், லூத்தரன் ஆராதனையின் ஒரு தனித்துவமாகும்.

சர்வ வல்ல திரியேக தேவனுக்கு அர்ப்பணிப்பையும் பணிவையும் புலப்படுத்தும்படியாக ஆராதனையின் பல்வேறு கட்டங்களிலே லூத்தரன்கள் நிற்கவோ, குனியவோ அல்லது முழந்தாளிடவோ செய்வார்கள். போதகர்கள் மக்கள்மீது சிலுவையின் அடையாளத்தை இடும்போது மக்களும் பல்வேறு கட்டங்களிலே சிலுவை அடையாளம் இட்டுக்கொள்வார்கள்.

லூத்தரனியமானது இயேசுவின், சீடரின் மற்றும் வேதாகமத்திலோ சபை சரித்திரத்திலோ முக்கியமான நபர்கள் போன்றோரின் சுரூபங்கள் போன்றதான அழகான திருச்சபைக்கலைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்திவருகிறது. பல லூத்தரன்சபைகளிலே பீடங்கள், மெழுகுவர்த்திகள், சுரூபங்கள், இயேசுதொங்குவதைக் காட்டும் சிலுவைகள், சின்னங்கள், வர்ணக்கண்ணாடி ஜன்னல்கள், திருப்பவனிச் சிலுவைகள், பதாதைகள், மற்றும் பல்வேறு வகையான கலை மற்றும் அலங்காரம் போன்றவைகளை நீங்கள் காண்பீர்கள். கிறிஸ்துவிலும் அவரது கொடைகளிலும் கவனத்தைச் செலுத்த அவை எமக்கு உதவுகிறது. சில லூத்தரன் சபைகள் பகட்டுநுணுக்கமாக அலங்கரிக்கப்பட்டு விலையுயர்ந்த ஆபரணங்களும் அங்கே அணிவிக்கப்பட்டிருக்கும். வேறு சில வெறுமனே அலங்கரிக்கப்பட்டிருக்கும். அப்படியானவை களைப் பற்றி நாம் நிலையான நிபந்தனைகளை விதிப்பதில்லை. நாம் தேவனைத் துதிப்பதற்கும் மகிமைப்படுத்துவதற்கும் எல்லா வகையிலுமான கனத்துக்குரிய கலை வேலைப்பாடுகள் மற்றும் சோடனைகளைப் பயன்படுத்தக்கூடிய எமது கிறிஸ்தவ சுயாதீனத்தையிட்டு களிகூருகிறோம்.

## லூத்தரன் ஆராதனையானது எப்டியக லூத்தரன் இறையியலைப் பிரதிபலிக்கிறது?

ஒரு சபை அதன் ஆராதனையை எப்படியாக நடாத்துகின்றதென்பது அது எதை நம்புகிறது, கற்பிக்கிறது அல்லது அறிக்கையிடுகிறது என்பதன் பிரதிபலிப்பாகும். எனவே லூத்தரன் இறையியலின் உட்பொருளடக்கத்தைத் தக்கவைப்பதும் அதேவேளை லூத்தரன் அல்லாத ஆராதனை முறைமையினை தழுவுவதென்பதும் கடினமானதாகும். சபையையும் அதன் ஆராதனையையும் மாட்டின் லூத்தர் சீர்திருத்திடுவதற்கு நாடினாரேயன்றி அதனை மீளக்கண்டுபிடிக்கவல்ல. சுவிசேஷமே தெய்வீக ஆராதனையின் இதயநாதம் என்பதை லூத்தர் அறிந்திருந்தார். சுவிசேஷத்துடன் முரண்படுத்திய அல்லது அதைக் கொச்சைப்படுத்தியவைகளை மாத்திரமே அவர் மாற்றினார். உண்மையான, சுவிசேஷத்தை மையமாகக் கொண்ட, சரித்திர ஆராதனை முறைமைகள் மற்றும் சபையின் சடங்காசாரங்கள் போன்றவைகளை லூத்தர் என்றுமே விட்டுவிடவில்லை.

## எமது திருப்பேரவையிலே பொதுவான ஆராதனை ஒழுங்குகள் ஏன் அத்தனை ஆசீர்வாதமாய் இருக்கிறது?

இந்தக் கேள்விக்குப் பதில் தருவதிலே இரண்டு தீவிரநிலைப்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும். முதலாவது தீவிரநிலைப்பாடு ஒவ்வொரு அவையும் அதுவிரும்பியதைச் செய்யலாம், விரும்பியவிதமாகச் செய்யலாம், எமது அவை ஐக்கியத்தில் உள்ளதான வேறு எந்த அவைகளையும் பற்றிய கரிசினை இல்லாமல் செயற்படலாம் எனும் கண்ணோட்டமாகும். இதன் எதிர் தீவிரநிலைப்பாடு சபையில் உள்ள ஒவ்வொருவருமே ஒவ்வொரு ஞாயிறும் அழுத்தந்திருத்தமாக ஒரே காரியத்தை, எவ்விதத்திலும் வழுவாது, எவ்வித வேறுபாடோ மாற்றமோ அல்லது வித்தியாசமோ இல்லாமல் செய்யவேண்டும் என்பதாகும். இந்த இரண்டு தீவிரநிலைப்பாடுகளுமே பொருத்தமானதோ அல்லது ஏற்புடைத்ததோ அல்ல என்பது மட்டுமன்றி அவைகள் நிச்சயமாகவே லூத்தரன் நிலைப்பாடு அல்ல.

எமது திருப்பேரவையானது – சபையின் நன்மைக்காக – ஆராதனை ஒழுங்கு முறைமைகளிலே ஒரேவிதமான போக்கு பேணப்படுவதையிட்டு எப்போதுமே கரிசினை கொண்டுள்ளது. அதன்மூலம் நாம் எமது வேறுபட்ட, தனித்துவமான லூத்தரன் விசுவாசத்தை, எமது சபையைச்சூழ லூத்தரன் அல்லாத சபையகள் பல சூழந்துள்ளதான நாட்டிலே ஆணித்தரமாக அறிகையிடலாம். சத்தியக்கோட்பாட்டிலே ஒருமித்ததன்மையானது நடைமுறையிலே ஓருமித்திருப்பதிலே பிரதிபலிக்கும். எமது திருப்பேரவையின் முதலாவது தலைவர், கலாநிதி C.F.W. வோல்தர் (Walther) ஆராதனை நடைமுறைகளிலே ஒருமித்த தன்மையின் மதிப்புப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்:

சகல விசுவாச கிறிஸ்தவர்களினதும் கிரகிப்புத்தன்மை அல்லது உணர்ச்சி அல்லது உருசியைப் பொறுத்தவரைக்கும் அங்கே ஒருமித்த தன்மை நிலவவேண்டும் என நாம் வலியுறுத்தவில்லை – எல்லோருமே தன்னைப்போன்ற மனம் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்று எவராவது சொல்லத் துணிவதும் கிடையாது. ஆனாலுங்கூட, லூத்தரன் ஆராதனை ஒழுங்கானது இதர சபைகளின் ஆராதனைகளில் இருந்து எவ்வளவாக வேறுபடுகிறதென்றால், இதர சபைகளின் ஆராதனை இல்லங்கள் விரிவுரை மண்டபங்கள்போல, அங்கே செவிமடுப்பவர்கள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உரையாற்றப்படுவதுபோல இருக்க, எமது சபைகளோ ஜெபத்தின் நிஜ இல்லங்களிலே, கிறிஸ்தவர்கள் மகோன்னத தேவனை உலகத்துக்கு முன்பதாகப் பகிரங்கமாக சேவிப்பவர்களாக உள்ளனர். ஒருசிலர் கேட்கக்கூடும்: "சமயச் சடங்குமுறைமைகளிலே ஒருமித்த தனமை இருப்பதனால் பயன் என்ன?" நாம் கூறும் பதில், "யுத்தகளத்திலே கொடியின் பயன்பாடு என்ன? எந்த ஒரு யுத்தவீரனும் கொடியினால் எதிரியைத் தோற்கடிக்க முடியாதுதான். ஆனாலுங்கூட, கொடியின்மூலம் தான் எதற்கு உரியவன் என்பதை அவன் கண்டுகொள்கிறான்." நாம் எமது பிதாக்களின் பாதபடிகளிலே நடப்பதற்கு மறுப்புத்தெரிவிக்கக்கூடாது.

## ஆனால் லூத்தரன் ஆராதனை ஜெர்மானிய ஆராதனை அல்லவா?

லூத்தரன் சீர்திருத்தம் ஜெர்மனியிலே ஆரம்பிக்கப் பட்டதால், லூத்தரன் ஆராதனையும் ஜெர்மன் ஆராதனையாகத்தான் இருக்கவேண்டும் என மக்கள் கூறுவதை சிலவேளை நாம் கேட்டிருக்கிறோம். இது பொதுவானதோர் தப்பெண்ணமாகும். உண்மை எதுவெனில், சரித்திரம் முழுவதுமே லூத்தரன் ஆராதனையானது கொண்டிருந்த பாடல்கள், பாசுரங்கள் மற்றும் ஆராதனை ஒழுங்குகள் ஆகியவைகள் கிழக்கை அண்மித்த கிறிஸ்தவ ஆராதனைகளில் தமது மூலவேரைக் கொண்டதாக மட்டுமன்றி, அதற்கும் அப்பால் பண்டைய யூத ஆலய வழிபாட்டில் இருந்து விருத்தியடைந்த யூத ஜெபாலயங்களின் ஆராதனைகளை மூல்மம் கொண்டதாயும் உள்ளது. எனவே லூத்தரன் ஆராதனையானது ஆயிரமாயிரம் வருடங்களின் பாரம்பரியத்திலே வேரோடியதுடன் பல மொழியினக்குழுக்களின் பங்களிப்புக்களைப் பிரதிபலிப்பதாயும் உள்ளது: அதாவது ஆபிரிக்க, ஆசிய, மத்திய கிழக்கத்தேய, ஸ்பானிய, கிரேக்க, இத்தாலிய, பிரெஞ்சு, ஜெர்மானிய மற்றும் அமெரிக்க ஆகிய இனத்தவர்களின் பங்களிப்புக்கள். நிச்சயமாகவே, லூத்தரன் ஆராதனை ஜெர்மானிய ஆராதனை அல்ல.

## முடிவாக

இந்தப் புதிய மிலேனியத்தின் உதயத்திலே நாம் கர்த்தரை ஆராதிப்பதற்காகக் கூடிவந்திருந்திருப்பதைக் காணும்போது, நாம் எமது பாடல்கள் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ஆட்டுக் குட்டியானவரைச் சூழநின்று, இரவும் பகலுமாக அவரை ஆராதிக்கும் தூதர்கள், பிரதான தூதர்கள் மற்றும் கடந்த மிலேனியத்துச் சகல விண்கூட்டத்தாருடனும் இணைந்திருப்பதை உணர்கிறோம். எமது கர்த்தர் ஞாயிறுதோறும் எம்மை ஆராதனைக்கு ஒன்றாகக் கூட்டிச்சேர்க்கும்போது, நாம் பரலோகத்தின் முழுக்கூட்டத்தாருடனும் இணைந்து எமது நல்ல கிருபைநிறைந்த தேவனைத் துதிக்கிறோம். பூலோகத்தில் உள்ள பரிசுத்தவான்களும் பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களும் ஆதியும் அந்துமான அவரை, முதலும் முடிவுமான அவரை, அல்பாவும் ஒமேகாவும் ஆன அவரை, எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒர தேவனாக முடிவின்றி உலகை ஆள்பவராகிய அவரை துதிக்கிறோம்.

"..சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியான வருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக!.." (வெளி. 5:13)

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை